பட்டுச் சாறிகள்
பட்டுவேட்டிகள் மற்றும்
சிறுவர்களுக்கும்
பெரியவர்களுக்கும் புதிய
டிசைன் புடைவைகளை
தெரிவுசெய்ய
★ இன்றே நாடுங்கள் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 வைகாசி 06 வெள்ளிக்கிழமை (20 5 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 173

மனமிசைந்து ஏவி
மங்கையர் நாடும் ஒரே
★ புடைவை ஸ்தாபனம் ★
மதுரா
பட்டு மகால்
75, பெரிய கடை,
யாழ்ப்பாணம்.

# வடமராட்சி கிழக்கில் பீரங்கித் தாக்குதல் தொடர்வதால் இரவு நேரம் பதற்றநிலை

## இன்று மூடப்பட்டிருக்கும்

யாழ்ப்பாணம், மே. 20

அனைத்து அனுமதி வழங்கும் செயலகங்களும் இன்று திறக்கப்படமாட்டாது என்பதைப் பொது மக்களின் கவனத்திற்குப் போக்குவரத்துக் கண்காணிப்பு, பிரிவினர் அறியத்தருகின்றனர். (இ)

## கடற்படை, விமானப்படை அடிக்கடி ரோந்து நடவடிக்கை

தாளையடி, மே 20

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு கடலில் தரித்து நிற்கும் யுத்தக் கப்பலில் இருந்து கடந்த சில நாட்களாக நடத்தப்படும் பீரங்கி மற்றும் ஷெல் தாக்குதல்களால் இப்பகுதியில் இரவு நேரங்களில் பதற்ற நிலை அதிகரிக்கிறது.

யுத்தக் கப்பலில் இருந்து மட்டுமன்றி வெற்றிலைக்கேணி இராணுவ முகாமில் இருந்தும், வெற்றிலைக்கேணி — ஆனையிறவு இராணுவ தொடர் வேலிப் பகுதியில் இருந்தும் "பரா" வெளிச்சம் பாய்ச்சப்பட்டு நடத்தப்படும் ஷெல் வீச்சும் கடந்த இரண்டொரு தினங்களாகத் தீவிரமடைந்துள்ளது.

இதேவேளை வடமராட்சி கிழக்கு, வடமராட்சிப் பகுதிகளில் இரவு நேரத்தில் படகுகளின் ரோந்தும், பகல் இரவு நேரங்களில் விமான நோட்டமும் அதிகரித்து வருகின்றன.

வெற்றிலைக் கேணிக்கும் காங்கேசன்துறைக்கு மிடையே

(3 ஆம் பக்கம் பார்க்க)




தேர்தல் நெருங்க, நெருங்க அரச ஊழியர் பாடு கொண்டாட்டம்தான் பாருங்கோ..!

## அஷ்ரப் நேற்று ராஜினாமா!

கொழும்பு, மே 20

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் எம். எச். எம். அஷ்ரப் நேற்று தமது எம். பி. பதவியை ராஜினாமாச் செய்தார்.

தமது பதவியிலகல் கடிதத்தை சபையில் வாசித்து விட்டு ஜனாப் அஷ்ரப் நாடாளுமன்றத்தில் சபாநாயகரிடம் கையளித்தார்.

கடந்த மார்ச் மாதம் கிழக்கில் நடந்த உள்ளூராட்சித் தேர்தல்களின் போது, முஸ்லிம் காங்கிரஸ் ஆறு பிரதேச சபைகளில் ஒன்றில் தோற்றாலும் கூட தாம் எம். பி. பதவியை ராஜினாமாச் செய்துவிடுவதாக ஜனாப் அஷ்ரப் உறுதியளித்திருந்தார்.

அந்த உறுதிமொழிக்கிணங்கவே தாம் எம். பி. பதவியை ராஜினாமாச் செய்திருப்பதாக ஜனாப் அஷ்ரப் நேற்று நாடாளுமன்றத்தில் அறிவித்தார். (இ-எ)

## காமினி திஸநாயக்கா நேற்று எம்.பியாக பதவிப் பிரமாணம்

கொழும்பு, மே 20

முன்னாள் அமைச்சர் காமினி திஸநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சியின் தேசியப்பட்டியல் எம். பியாக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

நேற்றுக் காலை நாடாளுமன்றத்தில் உபசபாநாயகர் காமினி பொன்சேகா முன்னிலையில் காமினி திஸநாயக்கா எம். பியாகப் பதவிப் பிரமாணம் செய்து கொண்டார்.

பிரேமதாஸா அரசு பதவியில் இருந்தபோது, அவருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு விலகி லலித் அத்துலத்முதலியுடன் சேர்ந்து ஜனநாயக ஐக்கிய தேசியக் கட்சியை காமினிதிஸநாயக்கா ஆரம்பித்தார்.

தேசியப்பட்டியல் மூலம் எம். பியான பலே ஏனைத்தவரைப் பிரதிநிதித்துவப் படுத்தும் எம். எச். அமித் தனது பதவியை ராஜினாமாச் செய்து காமினி திஸநாயக்கா எம். பியாவதற்கு வழிவிட்டுக்கொடுத்திருந்தார். (இ-எ)

## இனப்பிரச்சினைத் தீர்வு:
## கதவுகள் திறந்து உள்ளன என்கிறார் பிரதமர் ரணில்

கொழும்பு, மே 20

இனப்பிரச்சினைக்குப் பேச்சுவார்த்தை மூலம் தீர்வைக் காணுவதற்கான கதவுகள் திறந்து வைக்கப்பட்டுள்ளன.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, நாடாளுமன்றத்தில் நேற்று, அவசரகால நீடிப்புப் பிரேரணை மீதான விவாதத்துக்குப் பதிலளித்துப் பேசுகையில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் அமைதியை ஏற்படுத்துவதில் அரசு உறுதியாக உள்ளது.

மக்கள் தமது அன்றாட வாழ்க்கையை நடத்துவதற்கு ஏதுவாக நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதில் அரசு தீவிர முயற்சி எடுத்து வருகிறது.

இவ்வாறு பிரதமர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சியின் சார்பில் விவாதத்தை முடித்துவைத்துப் பேசிய லக்ஷ்மன் கிரியெல்ல — வடக்கு - கிழக்கில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்கு அரசிடம் முழுமையான திட்டம் எதுவும் இல்லை என்று குற்றஞ்சாட்டினார். [இ-எ]

## நோயாளருடன் பினாம்பயான்

யாழ்ப்பாணம், மே 20

கொழும்பில் சிகிச்சை பெற்ற 15 நோயாளிகளை ஏற்றிக்கொண்டு நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்த "பினாம்பயான்" கப்பல் கொழும்பில் சிகிச்சை பெற உள்ள 17 நோயாளிகளை ஏற்றிக்கொண்டு நேற்று மாலையே மீண்டும் திருகோணமலை நோக்கிப் புறப்பட்டது. (இ-15)

## கிழக்கு பகுதி மக்கள்
## ராணுவ முகாமில் கூலி இன்றி வேலை

யாழ்ப்பாணம், மே 20

மட்டக்களப்பில் தம்பிலுவில், திருக்கோவில், விநாயகபுரம், பொத்தானை, காஞ்சரன்குடா, தாண்டியடி போன்ற பகுதிகளில் வசிக்கும் மக்கள் இராணுவ முகாம்களில் கூலி இன்றி வேலை செய்யும்படி நிர்ப்பந்திக்கப் படுகின்றனர்.

வேலை செய்ய வராதவர்கள் இராணுவ முகாம் அமைக்க தேவையான சிமெந்து பைக்கெட் ஒன்று, அல்லது கூரைத்தகடு ஒன்று அல்லது இராணுவம் கேட்கும் வேறு ஏதாவது ஒருபொருளை விலைக்கு வாங்கி அதற்கான சிட்டையுடன் அதனை ராணுவ முகாமில் கொடுக்க வேண்டுமென்றும் கட்டாயப் படுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. (இ 9)

## கற்பூரம், பற்றரி கடத்தல் முயற்சி மூவர் தண்டனை

கொழும்பு, மே 20

தடைசெய்யப்பட்ட பொருள்களான கற்பூரம், பற்றரி ஆகியவற்றை வடபகுதிக்குக் கடத்தச் செல்ல முயற்சித்ததாக் குற்றஞ்சாட்டப் பட்டிருந்த மூன்று தமிழ் இளைஞர்களுக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஷிரானி திலகவர்த்தனா தலா 4 ஆயிரம் ரூபா அபராதமும் ஐந்து வருட காலத்துக்கு ஒத்திவைக்கப்பட்ட ஒரு வருடக் கடூழியச் சிறைத்தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

கிளிநொச்சி, ஆனந்தபுரத்தைச் சேர்ந்த சங்கரதாஸ் ராஜ்மோகன், வைரவநாதன் திருநாவுக்கரசு திருகோணமலை, உப்புவெளியைச்சேர்ந்த வல்லிபுரம் விஜயராசா ஆகியோரே தண்டனை பெற்ற இளைஞர்கள் ஆவர். (இ-எ)

## உளவுப் பிரிவினர் பின் தொடர்கின்றனர்
### ஒஸி குற்றச்சாட்டு

கொழும்பு, மே 20

அரசாங்கத்தின் தேசிய புலனாய்வுப் பணியகத்தினர் தம்மைப் பின் தொடர்ந்து உளவு பார்ப்பதாக ஸ்ரீலங்கா மக்கள் கட்சித் தலைவர் ஒஸி அபய குணசேகரா குற்றஞ்சாட்டியிருக்கிறார்.

கடந்த 12 ஆம் திகதி தாம் சீனத்தூதுவரைச் சந்திக்க சீனத் தூதரகம் சென்றிருந்த போது அரசுப் புலனாய்வு அதிகாரிகள் சீனத்தூதரகத்துக்கு வெளியே காத்து நின்றனர் என்று திரு அபயகுணசேகரா தெரிவித்தார்.

"அமைச்சர் சிறிசேன கூரேயை நான் இரகசியமாகச் சந்தித்துப் பேசுகிறேன் எவறு அரசுப் புலனாய்வுப் பிரிவினர் எண்ணுகின்றனர் போலும்"—என்றும் அபய குணசேகரா தெரிவித்தார்.

இது குறித்துத் தாம் பிரதி பொலிஸ்மா அதிபர் மித்ரா ஆரியசிங்காவைச் சந்தித்து முறையிட்டதாகவும் அவர் தெரிவித்தார். (இ-எ)



## அரச ஊழியருக்கு மேலும் நிவாரணம்
### ஜனாதிபதி உத்தரவு

கொழும்பு மே 20

அரசு ஊழியருக்கு மேலும் நிவாரணம் வழங்கும்படி ஜனாதிபதி விஜேதுங்க உத்தரவிட்டுள்ளார்.

இதன்படி - காணி வாங்க அல்லது வீடு கட்ட வங்கிகளில் கடன்பெற்ற அரச ஊழியர்கள் அக்கடனைத் திருப்பிச்செலுத்த ஐந்துவருட சம்பளம் கடனாக வழங்கப் படவுள்ளது.

வங்கி தனது கடனுக்கு அறவிடும் வட்டியிலும் பார்க்க அரச ஊழியர் பெறும் ஐந்து வருடச் சம்பளக் கடனுக்கு வட்டி குறைவாக அறவிடப் படுகிறது

அத்துடன் அரச ஊழியருக்கு கஷ்ட நிவாரணக் கடனாக பத்து மாதச் சம்பளத்தை வழங்கும்படி ஜனாதிபதி விஜேதுங்க உத்தரவிட்டுள்ளார்.

இப்போது ஆறுமாதச் சம்பளமே கஷ்ட நிவாரணக் கடனாக வழங்கப்பட்டு வருகிறது. (இ-எ)

## தனிமரமாகிவிட்டேன் என்கிறார் கூரே

கொழும்பு, மே 20

நான் தனிமரமாகி விட்டேன். மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸாவின் கொள்கைகளை முன்னெடுத்துச் செல்வதில் எனக்கு முழு அக்கறை உண்டு ஆனாலும் நான் தனியே என்ன செய்ய முடியும்?

வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சர் திரு சிறிசேன கூரே கொழும்பு தமிழ் பத்திரிகை ஒன்றுக்கு இவ்வாறு கூறியுள்ளார்.

ஐ. தே. க. என்னைச் சவிப்படையச் செய்துவிட்டது. கட்சி நலனில் அக்கறையுள்ள கட்சி விசுவாசிகள் ஒற்றுமையாக செயற்பட முன்வராவிட்டால் கட்சியின் எதிர்காலம் பாதிப்படையும்.

—இவ்வாறு அவர் மேலும் கூறியுள்ளார். (இ-5)

## சிறிசேன கூரேயே முதலில் வாழ்த்தினார்

கொழும்பு,மே 20

நேற்றுக் காலை 8. 58 மணிக்கு நாடாளுமன்றம் சென்ற காமினி திஸநாயக்காவுக்கு முதன்முதலாக வாழ்த்துக் கூறி வரவேற்றவர் அமைச்சர் சிறிசேன கூரே என்று தெரிவிக்கப் படுகிறது.

பதவிப்பிரமாணம் செய்த பின்னர் நாடாளுமன்றத்தில் நான்காவது வரிசை ஆசனம் ஒன்றில் காமினி அமர்ந்திருந்தார்.

பின்னர் அவர் செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார்

புதிய சவால்களைச் சந்திக்கத் தாம் தயாராக இருப்பதாக அவர் அப்போது தெரிவித்தார். அவருக்கு முக்கிய அமைச்சு ஒன்று வழங்கப்படவிருப்பதாக பி. பி. ஸி அறிவித்தது. (இ-எ-9)

## இனப்பிரச்சினை தீர்வு அதிகாரம் காமினிக்கு

கொழும்பு, மே 20

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணக்கூடிய அதிகாரங்களைக் கொண்ட அமைச்சராக திரு. காமினி திஸநாயக்கா இன்று பதவி ஏற்பார்.

இப்படி ஐ. தே. க. வட்டாரங்களை மேற்கோள் காட்டி வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது. (இ-எ-6)

## ரேணுகா புறக்கணிப்பு

கொழும்பு, மே 20

நாடாளுமன்றத்தில் நேற்று எம்.பியாக பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்ட காமினி திஸநாயக்கா அங்கு இருந்த அமைச்சர்களில் ஒருவரைத் தவிர்ந்த ஏனையோருக்கும் அனைத்து எம்.பிக்களுக்கும் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார்.

சுகாதார அமைச்சர் ரேணுகா ஹேரத்துக்கு மட்டும் காமினி திஸநாயக்கா தமது வாழ்த்துக்களைத் தெரிவிக்கவில்லை. (இ-எ-6)

## இலங்கைத் தூதரகம் முன் ஆர்ப்பாட்டம்

சென்னை, மே 20

இந்திய மீன்பிடிப்படகுகள் மீது - இலங்கை கடற்படையினர் தாக்குதல் நடத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து சென்னையில் உள்ள இலங்கை துணைத் தூதரகம் முன்னிலையில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

ஆர்ப்பாட்டத்துக்கு காங்கிரஸ் கட்சி உறுப்பினரும், நாடாளுமன்ற உறுப்பினருமான தனுஷ்கோடி ஆதித்தன் தலைமைவகித்தார்.

இது தொடர்பான மனு ஒன்றை இலங்கை துணைத் தூதரிடம் ஆதித்தன் கையளித்தார் (இ-9)

## வடக்கில் 90 வீத நிலப்பரப்பில் தேர்தல் நடத்துவது சாத்தியமா?
### நாடாளுமன்றத்தில் கேள்வி

கொழும்பு மே 20

அரசு தேர்தலுக்குத் தயாராகிறது. ஆனால் வடக்கில் 90 சதவீத நிலப்பரப்பில் தேர்தலை நடத்தும் சாத்தியம் உண்டா என்பதை அரசு உணரவேண்டும்.

யாழ். மாவட்ட எம்.பி ஸ்ரீகாந்தா நேற்று நாடாளுமன்றத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு கேள்வி எழுப்பினார்.

சமாதானப் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்று திரு. பிரபாகரன் கூறியுள்ளார். இதற்கு அரசாங்கம் செவிமடுத்ததா?

சில பொலீஸாருக்குப் பணம் தேவைப்பட்டால் கொழும்பில் உள்ள தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்படுகிறார்கள்.

தமிழர்கள் நீதி நியாயம் கோருகிறார்கள். தமிழர் கோரும் நியாயத்தை வழங்க அரசு தவறுமானால் அது நாட்டுக்கு நன்மையாகாது. ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன, அவை கிழித்தெறியப்பட்டன.

சபாநாயகர் யாழ் செல்ல வேண்டும். அவர் சமாதானப் பேச்சுகளை முன்னெடுத்து சமாதானம் காணவேண்டும்.

சபாநாயகர் நடுநிலையானவர் அவரை எவரும் தடுத்து நிறுத்தி விடமுடியாது.

இப்படி அவர் ...

## பாதாள உலகைச் சேர்ந்த 18 பேர் தங்காலையில் கைது

கொழும்பு, மே 20

பாதாள உலகைச் சேர்ந்தவர்கள் என்று சந்தேகிக்கப்படும் பதினெட்டுப் பேர் தங்காலை ... கைது செய்யப்பட்டனர் என்று அறிவிக்கப்படுகிறது.

தங்காலைப் பொலீஸார் நடத்திய திடீர் சுற்றிவளைப்பின்போது இவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

## நரோமா பயணிகளை சோதனையிட தனி அதிகாரி

கொழும்பு, மே 20

திருமலையில் இருந்து காங்கேசன்துறைக்கு பயணிகளை ஏற்றிச் செல்லும் நரோமா கப்பலில் பயணிகள் எடுத்துச் செல்லும் பொதிகளை சோதனை செய்வதற்கு தகுதி வாய்ந்த அதிகாரி ஒருவர் நியமிக்கப்படவுள்ளார்.

கடற்படை உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள் காட்டி கொழும்பு பத்திரிகை ஒன்று இத்தகவலை வெளியிட்டுள்ளது.

அண்மையில் 'நரோமா' கப்பலில் பயணம் செய்த வங்கி ஊழியர் ஒருவர் தனக்குக் கிடைத்த தங்கப் பதக்கம் ஒன்றை சோதனையின் போது கடற்படையினரிடம் பறிகொடுத்தார்.

இதனை அடுத்தே புதிய ஏற்பாடு நடைமுறைப்படுத்தப் பட உள்ளதாக அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

**கோழிக்குஞ்சு விற்பனை**

சிவப்பு, கறுப்பு, சேவல் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. ''மல்லிகா பதி'', மானிப்பாய். (30948)

**தேவை**

ஏமது ஸ்தாபனத்திற்கு உடன் சிரட்டைகள் தேவை. ஆர். வி. ஜி. பீடி ஸ்தாபனம், 58, குருக்குத்தெரு, நல்லூர். (30951)

**இலகு திருமண சேவை**

இந்து, வயது 29, ரோகிணி, உதயச் செவ்வாய், U. K விசா உடையவருக்கு மணப்பெண் தேவை. இலங்கையில் திருமணம் செய்யலாம். தொடர்பு: ஞாயிறு காலை. புதன் மாலை. த. விமலா, யாழ். நாச்சிமார் கோவிலடி. (30931)

**நீமோல்**

மலசலகூடம், கழிவுநீரோடும் வாய்க்கால் என்பன வற்றை "நீமோல்" கொண்டு சுத்திகரித்து நோய்க்கிருமிகளிலிருந்து பாதுகாப்புத் தேடுங்கள். இது மிக்கவைத் தயாரிப்பு. போத்தல் ரூபா 60/- மட்டுமே. மொத்தக் கொள்வனவிற்குக் கவர்ச்சியான கழிவுண்டு. ''மிக்வைற்''. (சி-8183)

**சர்நாடக சங்கீதம்**

கைவேடு I ரூபா 10/- கைநூல் ரூபா 15/- 72 மேள கர்த்தா விளக்கம் ரூபா 5/-. மேற்படி பிரதிகள் எல்லாப் புத்தகசாலைகளிலும் விற்பனையாகின்றன. (7395)

**கணக்கீட்டு நியமனங்கள்**

இலங்கை கணக்கீட்டு நியமனங்கள் பொதுத்தராதர பரீட்சைகள் தொழில்நுட்ப கல்லூரிகளின் பரீட்சைகள் பல்கலைக்கழகங்களின் பரீட்சைகள் பட்டப்படிப்பு கணக்காளர் பரீட்சைகள் கணக்கீட்டு தொழில்நுட்ப பரீட்சைகள் இன்னும் பல பரீட்சைகளுக்குரியது விலை 45/-. ஆக்கம்; N K பாலச்சந்திரசர்மா B.Com (Hons) விற்பனையாகிறது பூபாலசிங்கம் பொத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-8209)

## 'மகவம்' சந்திப்பு

மகவம் சந்திப்பு 41 உரும்பிராய் இந்துக் கல்லூரியில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு ஆரம்பமாகும். கல்லூரி அதிபர் திரு சி. பாலசுப்பிரமணியம், மகவம் தலைவர் வேல் அமுதன் ஆகியோர் வழிநடத்துநர்களாகப் பணிபுரிவார்கள்.

''சொக்கன்'' பிரம்மஸ்ரீ வீரமணிஐயர் ஆகியோர் முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்கள்.

அன்னைதாசனின் ''சந்தன் கனிஅமுதம்'' இசை நாடா அறிமுகம், வேல் அமுதனின் 'வைகறை வில்லிசை விருந்து ''கறைபடிந்தநாட்கள்'' நாடகம் முதலிய நிகழ்வுகள் இச் சந்திப்பில் இடம்பெறும்.

## மானிப்பாய் மருதடி விநாயகர் தேவஸ்தானம்

கடந்த ஆலய மஹோற்சவத்தின் போது அடியவர்களினால் தவறவிடப்பட்ட சில உடைமைகள் ஆலய காரியாலயத்தில் இருக்கின்றன. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும். செவ்வாய்/வெள்ளிக்கிழமைகளில் காலை 8மணிமுதல் 9மணி வரையில் ஆலய காரியாலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

இவ் விளம்பரம் பிரசுரிக்கப்பட்டு 1 மாத காலத்தின் பின்பு உரிமை கோரப்படாத பொருள்களாவும் ஆலய சொத்தாகக் கருதப்படும்.

இங்ஙனம்,
மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய-
தர்மகர்த்தாக்கள் சபை.
(30944)

## புனித சவேரியார் திருநாள் திருப்பலி

புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் தேவாலய-வருடாந்த திருநாள் திருப்பலி இன்று வெள்ளிக்கிழமை [20-05-94] மாலை 4-00மணிக்கு யாழ் பேராலயத்தில் ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது.

அனைவரும் பங்கு கொண்டு இறையாசீரைப் பெற்றுக் கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

-புங்குடுதீவு பங்கு மக்கள்

(30932)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

**முது தத்துவமாணி தகுதிகாண் தேர்வு 1993 கலைப்பீடம்**

முது தத்துவமாணி தகுதிகாண் தேர்வுக்கான பின்வரும் பாடங்களில் பட்டப்படிப்பின் சாதாரண சித்தியடைந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பொருளியல்,
புவியியல்,
இந்து நாகரீகம்,
தமிழ், அரசறிவியல்,
சமஸ்கிருதம்,
கிறிஸ்தவ நாகரிகம்,
வரலாறு, மெய்யியல்,
மொழியியல்,
நுண்கலை,
நாடகமும் அரங்கியலும்

அறிவுறுத்தல்களுடன் கூடிய விண்ணப்பப் படிவங்கள் நேரடியாகவோ அன்றி தபால் மூலமாகவோ கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் 16-05-1994 இலிருந்து 30-06-1994 ஆம் திகதி வரை பெற்றுக் கொள்ளலாம்.

நேரடியாக விண்ணப்பங்களை பெற விரும்புவோர் பல்கலைக்கழக நிதியாளரிடம் ரூபா 10/- செலுத்திப் பெறப்பட்ட பற்றுச் சீட்டினை விண்ணப்பப் படிவம் பெற வரும்போது சமர்ப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர். தபால் மூலம் பெற விரும்புவோர் நிதியாளரின் பெயருக்கு எழுதப்பட்ட 10/- ரூபாவிற்கான காசுக்கட்டளை அல்லது தபாற் கட்டளையுடன் அல்லது தபாற் கட்டளையுடன் 8/- ரூபா பெறுமதியுள்ள முத்திரை ஒட்டி சுயவிலாசமிடப்பட்டு தபால் உறையினையும் அனுப்புதல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 30-06-1994 க்கு முன்பாக கலைப்பீடாதிபதி அலுவலகத்தில் ஏற்றுக் கொள்ளப்படும். இத்திகதியின் பின்பு வரும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

பதிவாளர்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
12.05.1994.
(சி-8181)

## கணக்கியல் A/L 95


பிரிவு 3
**ஆரம்பம்: 21-05-1994**
சனி மாலை 4மணி

ஆசிரியர்: **D. SAM**
76/2, TEMPLE ROAD, JAFFNA.

✲ பகுதி Iஇன் மிக முக்கிய அலகுடன் ஆரம்பம்
★ அனுமதிகள் வரையறுக்கப்பட்டன.

[30937]

## 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



**அமரர் வல்லிபுரம் ஜெகதீசன்**

(முன்னாள் பொறியியலாளர்-உர ஆக்கக் கூ. தாபனம், லங்கா சிமெந்து லிமிட்டெட்)

ஆண்டவன் படைப்பு: 07 - 10 - 1946
ஆண்டவன் அடியில்: 20 - 05 - 1987

அன்பின் பிறப்பிடமாய், பாசத்தின் உறைவிடமாய், பண்பின் சிகரமாய் எம்முடன் வாழ்ந்து எங்கள் குடும்ப ஒளி விளக்காய் எம்மை வழி நடத்தி மீளாத்துயரில் ஆழ்த்திய அன்புத் தெய்வமே! தங்கள் ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அன்பு மனைவி, தாய், தந்தை,
சகோதரர்கள், மைத்துனர்கள்.

முத்துக்கிருஷ்ணர் வீதி,
சுன்னாகம்.
(7098)

## பட்டமளிப்பு விழா

முத்தமிழ் இந்துக் கலாமன்றம் பத்தாண்டு நிறைவு காணும் இவ்வேளையில் உடுப்பிட்டி இமையூர் தந்த முது பேரறிஞர் திரு அருணாசலம் விநாயகமூர்த்தி அவர்களுக்கு அவ்வூர் பொதுமக்கள் சார்பில் இம்மன்றத்தினால் ''தமிழ் மாமணி'' என்னும் சிறப்புப் பட்டம் சூட்டப்படும்.

வண்டிதரும் சைவப்புலவருமாகிய நமசிவாயக்குருக்களால் சூட்டப்படும் பட்டமளிப்பு வைபவமாக இன்று வெள்ளிக்கிழமை மாலை 7-00 மணிக்கு நடைபெறும். இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கரவெட்டி பிரிவு உதவி அரசாங்க அதிபர் திரு. செ. ஸ்ரீனிவாசன் அவர்கள் கலந்து கொள்கின்றார்.

இந்நிகழ்வில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

முத்தமிழ் இந்துக் கலாமன்றம்
இமையாணன்
உடுப்பிட்டி.
[சி/8176]

## கலந்துரையாடல்

G. A. Q (94) பேராதனை மாணவர்களுக்கான 21-05-1994 மாலை 3மணிக்கு புதிய உயர்கல்லூரியில் பிரயாண ஒழுங்கு பற்றிய கலந்துரையாடல் நடைபெறும் அனைவரும் தவறாது சமுகம் தரவும்.

ஆ. சபாநாதன்,
**புதிய உயர்கல்லூரி.**

[30973]

## EXHIBITION
## CAKE and SUGAR GRAFT

**யோகி ஹோம் சயன்ஸ் அக்கடமி மாணவிகளால் நடத்தப்படும் கேக் மாச்சீனி மலர் அலங்கார**

# கண்காட்சி

இன்று (20-05-1994) வெள்ளி
காலை 10 மணிக்கு
**உயர்திரு கா. மாணிக்கவாசகர்**
அவர்களால்
(அரச அதிபர், யாழ்ப்பாணம்)
ஆரம்பித்து வைக்கப்படும்

தொடர்ந்தும்
**21ஆம், 22ஆம், 23ஆம், 24ஆம்** திகதிகளில்
காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும்.

இதில் மேலைத்தேய, கீழைத்தேய நவீன கேக் வண்ணங்கள் பலவிதமான மாச்சீனி மலர் அலங்காரங்கள் காட்சிப்படுத்தப்படும்.

**YOGI HOME SCIENCE ACADEMY**
71-B NAYANMAR ROAD,
KACHCHERI NALLUR ROAD,
NALLUR, JAFFNA.

கண்காட்சிக்கு ஆதரவு நல்குவோர்:
**யாழ்ப்பாணம்-
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்**
[சி-8169]

## அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

23 - 05 - 1994



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 02 | 23 |
| — | — |
| 10 | 04 |
| — | — |
| 1947 | 1994 |

**திருமதி நாகேஸ்வரி அம்பலவாணர்**

அன்னாரின் அந்தியேட்டிக் கிரியை 23-05-1994 காலை 4.00 மணிக்கு வில்லூன்றி தீர்த்தக் கரையிலும், பின்பு வீட்டுக்கிரியை அன்னாரின் இல்லத்திலும் நடைபெறும். வீட்டுக் கிரியையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் இறுதிக் கிரியைகளில் பங்கு பற்றியவர்கள், அனுதாபம் தெரிவித்தவர்கள், உதவி புரிந்தவர்கள் அனைவருக்கும் எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

எஸ். வி. முருகேசு (தகப்பன்),
ஆ. அம்பலவாணர் (கணவர்).

நல்லூர், யாழ்ப்பாணம்.
[30935]

## வெளிவந்து விட்டது!!

✲ வெப்ப இரசாயன நுட்பங்கள் ✲
(க. பொ. த. உயர்தர வகுப்பிற்குரியது)

**T. NAGARATNAM** B Sc (Ceylon)

பல வருடங்களாக இரசாயனத்தில் விசேட சித்தி பெற்று பல்கலைக்கழகம் புகுந்த மாணவர்களின் நன்மதிப்பைப் பெற்ற ஆசிரியரின் உன்னத வெளியீடு. பல அரிய நுட்பங்களை உள்ளடக்கியது.

சகல புத்தகசாலைகளிலும் கிடைக்கும்.

**'A' LEVEL CENTRE**
1ஆம் ஒழுங்கை, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.
[சி-8223]

## தமிழ் - ஆங்கில

**தட்டச்சு-சுருக்கெழுத்து வகுப்புக்கள்**
இத்துடன்
**ஆங்கில வகுப்புக்கள்**

**ஆரம்பம்: 23 - 05 - 1994**

விபரங்களுக்கு:
**வட இலங்கை தொழில் நுட்பக் கல்லூரி**
(கிளை)
(அன்னை பூபதி கலையரங்கம் அருகில் உள்ள செல்வத்துரை வீதியில்)
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.
[சி-8185]

## பயிலுநர் ஆசிரியர் தெரிவு போட்டிப் பரீட்சைக்கான விசேட பயிற்சி வகுப்புகள்

பாடநெறி: பொது விவேகம்,
பொது அறிவு

**ஆரம்பம்: 21 - 05 - 1994**
மு பகல் 9-00 மணி

★ இலவச அச்சடித்த பாடக் குறிப்புகள்
★ வகுப்புகள் - சனி, ஞாயிறு விடுமுறை நாட்களில்
★ நாளாந்தம் - மூன்று மணித்தியாலங்கள் முற்பகல் 9 — 12 மணி வரை
★ முழுப்பயிற்சி நெறிக்கான கட்டணம் ரூபா 250-00

**அஸ்ரன் கல்வி நிலையம்**
101/10, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(மக்கள் வங்கிக்கு அருகில்)
[சி-8207]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 19 | 20 |
| — | — |
| 10 | 04 |
| — | — |
| 1921 | 1994 |

**அமரர் நாகமுத்து வயித்திலிங்கம்**

(காதல் தெற்கை பிறப்பிடமாகவும் மட்டுவில் தெற்கை வசிப்பிடமாயக் கொண்டவரும் ஆவார்)

அன்பின் திருவுருவாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் பிறப்பிடமாய், கடமையின் இருப்பிடமாய் இருந்து திடீரென எம்மை எல்லாம் ஆறாத் துயரில் ஆழ்த்தி, மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்புத் தெய்வமே! மாதம் ஒன்று சென்றாலும், உங்கள் நினைவலைகள் என்றும் எம் நெஞ்சை விட்டகலாது.

அன்னாரின் மறைவுச் செய்தி கேட்டு உதவிகள் புரிந்தோருக்கும், இறுதிச் சடங்கில் கலந்து கொண்டவர்களுக்கும் எமது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும் அன்னாரது மட்டுவில் இல்லத்தில் இன்று (20-05-94) வெள்ளிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

மட்டுவில் தெற்கு,
சாவகச்சேரி.
(30)953

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
192/2, நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

## சேர்ந்திருந்து கொல்லும் எமன்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் போசாக்கின்மையின் பாதிப்பு தொடர்ந்து அதிகரித்த வண்ணமே உள்ளது. அத்தியாவசிய திரவியங்களின் பிரகாரம் போசாக்கின்மையால் சிசு மரணங்களும் மிகவும் உயர்ந்து செல்கின்றன. இந்த வருடத்தின் முதல் நான்கு மாதங்களில் மட்டும் இருபத்தொன்பது சிசுவினர் போசாக்கின்மையால் இறந்துள்ளனர். அதாவது மாதாந்தம் சராசரி ஏழு சிசுவினர் போசாக்கின்மையால் மடிந்துள்ளனர்.

மாதாந்தம் ஏழு சிசுவினர் இறந்துள்ளனர் என்ற கணக்கு பொருட்படுத்தாமல் இருக்கக் கூடிய ஒன்றல்ல. போசாக்கின்மை தமிழர்களின் நிரந்தர உயிர்க்கொல்லியாக உருவெடுத்து வரும் அபாயத்தையே இது எடுத்துக்காட்டுகிறது.

ஏற்கனவே பெருகிவிட்ட சிறுவர் போசாக்கின்மைக்கு மேலதிகமாக, கர்ப்பிணித் தாய்மார் மத்தியிலும் போசாக்கின்மை அதிகரித்து வருகிறது என்ற விரும்பத்தகாத நிலைப்பாட்டையும் இந்தத் தரவு வெளிப்படுத்துகிறது.

சிறுவர்களின் உடல் வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்துக்கும் தேவையான ஊட்டம் நிறைந்த உணவுப் பொருட்களை உட்கொள்ள முடியாத சமூக, பொருளாதாரக் காரணிகளாலேயே போசாக்கின்மை அவர்கள் மத்தியில் பெருகி வருகிறது. குறிப்பாக ஐந்து வயதுக்கு உட்பட்ட சிறுவர், சிறுமியரே போசாக்கின்மையால் பெரிதும் பாதிப்புறுகின்றனர்.

அவர்களைவிட வயதில் கூடிய கர்ப்பிணித் தாய்மாரும் போசாக்கின்மையால் பாதிக்கப்பட்டு அவர்கள் பிரசவிக்கும் சிசுவினர் இறக்கின்றனர் என்றால் —

போசாக்கின்மை, வயது வேறுபாடின்றி ஒரு சமூக வியாதியாகப் பரவி வருகிறது என்பதே அர்த்தமாகும். இது மிகவும் ஆபத்தான நிலையைச் சுட்டி நிற்கிறது.

ஆரவாரமின்றி, சேர்ந்திருந்து கொல்லும் எமனாக, வருங்காலத் தமிழ்க் குடிமக்களை அழித்தொழிக்கும் ஆபத்து உண்டு. தொற்று வியாதிகளால் உண்டாகும் மரணங்கள், அழிவுகள் வெளிப்படையாகத் தெரியக் கூடியன. போசாக்கின்மை அப்படியல்ல.

ஆகையால், போசாக்கின்மையை இல்லாமற் செய்வதற்கான இயன்ற சகல வழிமுறைகளையும் நடவடிக்கைகளையும் மிகுந்த விழிப்புடன் மேற்கொள்ள வேண்டிய காலம் இது.

போர்க் காலச் சூழ்நிலை — இராணுவ நடவடிக்கைகளால் இடம்பெயர்வு, உழைப்போரின் இழப்பு, தொழிலின்மை என்பனவும் —

பொருளாதார, போக்குவரத்துத் தடைகள் — அவற்றின் விளைவுகளான உணவுப் பற்றாக்குறை, பொருட்களின் விலை உயர்வு என்பனவும் —

மக்களில் பெரும்பாலானோர்கள் நிவாரணத்தையே நம்பி வாழ்வது, நிவாரணமாகப் போதிய அளவு உணவுப் பொருட்கள் கிடையாமை என்பனவும் —

குடாநாட்டிலும், தமிழ் மக்களின் ஏனைய பகுதிகளிலும் போசாக்கின்மை அதிகரிப்பதற்கான காரணங்களாகும்.

தமிழர்களின் இந்த வாழ்க்கை நிலை இப்போதைக்கு மாறும் சாத்தியம் இல்லை. மேலும் வருங்காலத் தமிழ்ச் சந்ததியை ஆரவாரமின்றி, வெளித் தோற்றத்துக்குத் தெரியாமல் கொன்றொழிப்பதற்கு போசாக்கின்மையை உகந்த ஆயுதமாக அரசு பயன்படுத்தும்.

ஆகையால், எமது சக்தியையும், வளங்களையும் பயன்படுத்தி போசாக்கின்மையைப் போக்கடிப்பதற்கான நிரந்தரத் திட்டம் ஒன்று உடனடியாக வகுக்கப்பட வேண்டும். நீண்ட கால நோக்குடன் அது தயாரிக்கப்பட வேண்டியது அவசியம்.

உலக நாடுகளில் குறிப்பாக, ஆசிய, ஆபிரிக்க நாடுகளில் போசாக்கின்மை இப்போது பொது வியாதியாகி வருகிறது. போசாக்கின்மையை எதிர்த்துப் போராடுவதில் அந்த நாடுகளின் அனுபவங்களையும் அறிந்து கொண்டு திட்டமிடுவதும், செயற்படுவதும் நன்மை.

பாதாள உலகத்தைச் சேர்ந்த

# எஞ்சிய கிரிமினல்களை பிடிக்க மீண்டும் தேடுதல் நடக்கும்!

கொழும்பு, மே 20

ஜனாதிபதி விஜேதுங்க அரசு பாதாள உலகத்தைச் சேர்ந்த எஞ்சியுள்ள கிரிமினல்கள் மீது இன்னொரு பாரிய தேடுதல் நடவடிக்கைக்கு உத்தரவிடக்கூடும் என்று தெரிவிக்கப்படுகிறது.

எஞ்சியுள்ள இக்கிரிமினல் நபர்கள் இன்னும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்பு வைத்திருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தேடுதலின் போது குறிப்பிட்ட செல்வாக்குள்ள அரசியல்வாதியுடன் தொடர்பு வைத்திருக்கும் கிரிமினல்கள் கைது செய்யப்படுவர் என்றும் கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐ.தே.கவில் உள்ள பிரேமதாஸ அணியைச் சேர்ந்தவர்கள் 'சொத்தி' உபாலியைக் கைகழுவி விட்டனர் என்றும் —

அமைச்சர் கூரே மட்டும் உபாலியை 'எமது பையன்களில் ஒருவர்' என்று வர்ணித்துள்ளார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை —

ஐக்கிய தேசியக் கட்சியுடன் சம்பந்தப்பட்டவர்களை ஆச்சரியப் படவைக்கும் முறையில் கைது செய்யப்படுவதை கைவிடும்படி கட்சியின் சில பிரிவினர் கட்சித் தலைமைப் பீடத்துக்கு அழுத்தங்கொடுத்துள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இப்படி கைது செய்யப்படுவது தேர்தல் ஆண்டில் கட்சியின் நற்பெயரை மாசுபடுத்தி விடும் என்பதே இவர்களின் வாதமாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## பரீட்சை மண்டபம் மாற்றம்

யாழ்ப்பாணம் மே 20

நாளை சனிக்கிழமை நடைபெறவுள்ள மாணவதாதிகளை ஆட்சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சைக்காக யாழ். இந்து மகளிர் கல்லூரியில் அமைக்கப்பட்டிருந்த பரீட்சை நிலையம் யாழ். இந்துக் கல்லூரிக்கு மாற்றப்பட்டுள்ளது.

இந்து மகளிர் கல்லூரியில் பரீட்சை எழுத இருந்த பரீட்சார்த்திகளை இந்துக்கல்லூரி பரீட்சை நிலையத்தில் பரீட்சைக்குத் தோற்றுமாறு யாழ். வலயம் — 1 கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (இ)

## வெள்ளி இதழாக 'வெளிச்சம்' இன்று வெளிவரும்

யாழ்ப்பாணம், மே 20

விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகத்தின் மாதாந்த வெளியீடான வெளிச்சம் கலை, இலக்கிய சமூக இதழ் நூற்றிஐம்பது பக்கங்களுடன் 'வெள்ளிஇதழாக' இன்று வெளிவருகின்றது.

இவ்விதழில் — ''கால நதிக்கரையில் மீள நினைக்கின்றேன்'' என்ற தலைப்பிலான தகவல்களுடன் தமிழீழத் தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் வெளிச்சத்துக்கு அளித்த விசேட செவ்வியுடன் பிரம்மஞானி, பேராசிரியர் கா. சிவத்தம்பி, அடேல் ஆன், கலாநிதி சபா. ஜெயராசா, கலாநிதி நா. சுப்பிரமணியன், வரலாற்றுத்துறை விரிவுரையாளர்களான ப. புஸ்பரத்தினம், செ. கிருஷ்ணராசா மற்றும் கவிஞர் இ. முருகையன், செல்வி. யசோதா பத்மநாதன், மு. இராதாகிருஷ்ணன் எழுதிய கட்டுரைகளும் —

கவிஞர் காசிஆனந்தன், புதுவை இரத்தினதுரை, சோ. பத்மநாதன் மற்றும் பனிரெ பிரபல எழுத்தாளர்களின் சிறுகதைகள் பலவும், நாக. பத்மநாதனின் உருவகக் கதையும் இடம் பெற்றுள்ளன. (த)

## ஆலயங்களில்

சுழிபுரம் பறாளை ஸ்ரீசுப்பிரமணிய சுவாமி கோவிலில் நாளை சனிக்கிழமை காலை 6 மணிக்கு விசேட சங்காபிஷேகம் நடைபெறவுள்ளது.

மாலை 6 மணிக்கு ''வள்ளி திருமணம்'' எனும் பொருளில் கதாப்பிரசங்கம் இடம் பெறும். (க-161)

★ ★ ★

நாகேஸ்வரம், அளவெட்டி தெற்கு - ஸ்ரீநாகவரத நாராயணர் தேவஸ்தானத்தில் நாளை சனிக்கிழமை ஏகாதசித் தீர்த்த விழா நடைபெறும். (த-51)

## பாடசாலைகளில்

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக்கல்லூரி ஆரம்பப்பாடசாலையின் இல்லவிளையாட்டுப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு பிக்னெல் மைதானத்தில் நடைபெறும். திரு சி ஜெயரத்தினமும் பாரியாரும் பிரதம விருந்தினர்களாகக் கலந்து கொள்வார்கள். (க-161)

## நாளை

வார்காவற்றுறை ப.நோ.கூ. சங்க விளையாட்டுக் கழகத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் நாளை சனி பிற்பகல் 2 மணிக்கு மேற்படி சங்க தலைமையகத்தில் நடைபெறும் (த)

★ ★ ★

கொழும்புத்துறை மேற்கு இந்து இளைஞர் மன்றம் கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட நாயகர் ஆலய மஹோற்சவத்தை முன்னிட்டு நடத்தும் சைவசமயப் பரீட்சை மற்றும் பண்ணிசைப் போட்டிகள் நாளை சனிக்கிழமை காலை 8-30 மணிக்கு கொழும்புத்துறை மேற்கு சிவயோக சுவாமி ஆச்சிரமத்தில் உள்ள மேற்படி மன்ற பணிமனையில் நடைபெறும். (த-17)

## லலித் கொலைச் சம்பவம்; தமிழ் இளைஞர் மீது வழக்கு

கொழும்பு, மே 20

முன்னாள் அமைச்சர் லலித் அத்துலத்முதலி கொலை தொடர்பாக சந்தையா விங்கேஸ்வரன் என்பவருக்கு எதிராக குற்றப்பத்திரிகையை சட்டமா அதிபர் தாக்கல் செய்வார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அத்துலத்முதலியைக் கொலை செய்தது அவரைக் கொலரொமேஸ் என்றழைக்கப்படும் ரகுநாதன் என்பவருக்கு உடந்தையாக இருந்தது ஆகிய குற்றச்சாட்டுகள் அடங்கிய குற்றப் பத்திரிகை இவர் மீது மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

குணா என்று அழைக்கப்படும் சந்தையா விங்கேஸ்வரன் இக்கொலைச் சம்பவத்தில் ரகுநாதனுக்கு உதவுவதற்காகக் கொழும்பு வந்திருந்தார் என்றும் —

இவர் விடுதலைப் புலிகள் இராணுவப்பிரிவு உறுப்பினர் என்றும் உத்தியோகபூர்வ சாட்சியத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

லலித் கொல்லப்பட்ட இடத்தில் இருந்து இயார் தூரத்தில் ரகுநாதனின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது.

சென்ற ஆண்டு செப்டெம்பர் 6ஆம் திகதி புறக்கோட்டை மணிக்கூண்டுக் கோபுரம் அருகில் உள்ள சோதனைத் தடைமுகாமில் வைத்து விங்கேஸ்வரன் கைது செய்யப்பட்டார் என்று அறிவிக்கப்படுகிறது.

முறையான அடையாள அட்டையைக் காட்டத்தவறியதற்காக கைது செய்யப்பட்ட அவரை கடற்படையினர் சோதனையிட முற்பட்ட போது அவர் பிஸ்டல் ஒன்றை எடுத்து கடற்படையினரைச் சுட்டாராம்.

சூடு இலக்குத் தவறவே அவரை கெட்டியாகப்பிடித்து குற்றப்புலனாய்வுப் பணியகப் பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்தனர்.

பிரதம நீதிவான் முன்னிலையில் விங்கேஸ்வரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அவருக்கு எதிராகக் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட விருப்பதாக சட்டவட்டாரங்கள் தெரிவித்தன. (ஒ-எ)

## இன்று

யாழ்ப்பாணம், மே 20

கோப்பாய் ஆசிரிய கலாசாலை சிரேஷ்ட விரிவுரையாளர் திருமதி பாலராணி சண்முகராசா தனது 32 வருட கால கல்வி சேவையிலிருந்து ஓய்வுபெற்றுள்ளார்.

இதனை முன்னிட்டு மேற்படி கலாசாலை விரிவுரையாளர்கள் ஆசிரிய மாணவர்கள் இணைந்து பிரியாவிடை வைபவம் ஒன்றை இன்று காலை நடத்துகின்றனர். (இ)

## ஆண்டு விழாவும் பாராட்டு விழாவும்

வல்வெட்டித்துறை, மே 20

இமையாணன் உடுப்பிட்டி வீரகத்தி விநாயகர் முத்தமிழ் இந்து கலாமன்றத்தின் ஆண்டு விழாவும் பாராட்டு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணிக்கு வீரகத்தி விநாயகர் அரங்கில் நடைபெறும்.

இவ்விழாவில் முது பேரறிஞர் அருணாசலம் விநாயகமூர்த்தி பட்டம் அளிக்கப்பட்டு பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்படுவார். (இ-155)

## புலிகளின் குரல் வானொலியில்

20 - 05 - 1994
வெள்ளி இரவு

★ 8-01 — கலைமஞ்சரி — ''வேள்வித் தீ'' நூல் அறிமுகம். ''தொடரும் பயணங்கள்'' — சிறுகதைபத் தொடர்து கவிதைகள் — 'இவனை அறியுங்கள்' — விடியலை நோக்கி
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — அரசியல் அரங்கம் — ''சிங்கப்பூரின் பிரம்படி தண்டனையும் மேற்குலகின் மனிதாபிமான கூச்சலும்''
★ 8-50 — லெப்டினன் கேணல் ராதா நினைவாக சிறப்பு நிகழ்ச்சி ஒலிபரப்பப்படும்.

21 - 05 - 1994
சனி காலை

★ 7-02 — மாவீரவணக்கம்
★ 7-15 — நீங்கள் கேட்டவை
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

## ''வைத்திய கலசம்'' அறிமுக விழா

குருநகர், மே 20

டாக்டர் எம். கே. முருகானந்தனின் ''வைத்திய கலசம்'' நூல் அறிமுக விழா நாளை சனிக்கிழமை மாலை 3-30 மணிக்கு தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தில் நடைபெறும்.

மல்லிகைப் பந்தல் ஏற்பாட்டில் நடைபெறும் அறிமுக விழாவுக்கு [illegible] நா. சுப்பிரமணியன் தலைமை வகிப்பார். (க-51)

## நாளை மூடப்படும்

யாழ்ப்பாணம் மே. 20

நாளை சனிக்கிழமை குடும்ப அட்டைப்பகுதி அலுவலகங்கள் திறக்கப்படமாட்டாது என்பதைப் பொது மக்களின் கவனத்திற்கு குடும்ப அட்டை பதிவு பகுதியினர் அறியத்தருகின்றனர். (இ)

## தமிழீழ பொது கல்வித் தேர்வு

யாழ்ப்பாணம், மே 20

1994 ஆம் ஆண்டுக்கான தமிழீழ பொதுக்கல்வித் தேர்வுக்கான விண்ணப்பப் படிவங்களை இன்று பகல் 12 மணிக்கு சகல கல்விக் கோட்டங்களிலும் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பாடசாலை அதிபர்கள் இந்த விண்ணப்பங்களை தமது கல்விக் கோட்டங்களில் பெறலாம்.

இவ்வாறு தேர்வுச் சபைச் செயலாளர் வெளியிட்டுள்ள பத்திரிகைக் குறிப்பு ஒன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

விண்ணப்பிப் பதற்கான முடிவு திகதி மே மாதம் 31 ஆம் திகதி ஆகும். குறிப்பிட்ட திகதிக்கு முன் விண்ணப்பங்களை கல்விக் கோட்டங்களில் ஒப்படைக்கும்படியும் அந்தப் பத்திரிகைக் குறிப்பு மூலம் கேட்கப்பட்டுள்ளது. [இ-9]

## வைகாசிப் பெருவிழா

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் வருடாந்த வைகாசிப் பெருவிழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை எட்டு மணி தொடக்கம் மாலை ஐந்து மணி வரை வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது.

விழாவுக்கு தபாலதிபர் திரு. சு. திருப்பரங்கிரிநாதன் தலைமை வகிப்பார்.

முதன்மை விருந்தினராக மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி. கதிரவேல்பிள்ளையும், சிறப்பு விருந்தினர்களாக ஓய்வுபெற்ற பிரதேசச் செயலர் திரு சி. முருகேசம்பிள்ளை, கரவெட்டி பிரதேச செயலர் திரு செ. ஸ்ரீநிவாசன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன், யாழ். பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த திருமதி நாச்சியார் செல்வநாயகம் ஆகியோர் உரை அரங்கில் கலந்து கொண்டு சொற்பொழிவாற்றுவர்.

யாழ்ப்பாண நீதிபதி திரு. ந. யோகசிவாமணி சிறப்புரை நிகழ்த்துவார்.

இவ்விழாவில் யாழ் பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ. சண்முகதாஸுக்கு ''ஞானபண்டித தமிழ்க் குரிசில்'' என்னும் விருது வழங்கிக் கௌரவிக்கப்படும். ஸ்ரீ செல்வச் சந்நிதி தேவஸ்தானத்தைச் சேர்ந்த ஸ்ரீலஸ்ரீ செ. வி. இராசேந்திரம் ஐயர் விருதை வழங்குவார்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். [அ]

## குடத்தனையில் மக்கள் கடை

குடத்தனை தபாற்கந்தோரடியில் புதிய மக்கள் கடை ஒன்று மருதங்கேணி ப. நோ. கூ. சங்கத்தினால் திறந்து வைக்கப்பட்டுள்ளது

சங்கத் தலைவர் திரு. எஸ். பொன்னம்பலம் இக்கடையைத் திறந்து வைத்தார்.

## கட்டளையிடும் அதிகாரி நியமனம்

கொழும்பு, மே. 20

இலங்கை காலாட் படையின் 5 ஆவது றெஜிமண்டின் கட்டளையிடும் அதிகாரியாக இராணுவ மேஜர் எஸ். ஐ. பி. தென்னக்கூன் நியமிக்கப் பட்டுள்ளார் என்று அறிவிக்கப்படுகிறது (ஒ-எ)

# கொழும்பு குண்டு வெடிப்பு: இரு தமிழ் இளைஞர் கைது!

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற தொடர் குண்டு வெடிப்புச் சம்பவங்கள் தொடர்பாக இரு தமிழ் இளைஞர்கள் கைதுசெய்யப் பட்டனர் என்று தெரிவிக்கப் படுகிறது.

குண்டு வெடிப்பின்போது கொல்லப்பட்ட அருள்தாஸ் என்பவரின் உதவியாளர்களாக இவர்கள் செயற்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டுள்ள இருவரில் ஒருவர் வானொலி பெட்டிகள் திருத்தும் கடை ஒன்றையும் சைவ உணவு விடுதி ஒன்றையும் நடத்தி வந்தார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இச் சம்பவம் தொடர்பாக சிங்களப்பெண் ஒருவர் உட்பட 13பேர் விசாரணைக்குட்படுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப் பட்டனர் என்று தெரிவிக்கப் பட்டது. (ஒ-எ)

# குட்டி பட்ஜெட் விவாதம்: அரச எம்.பிக்கள் குறைவு!

கொழும்பு, மே 20

நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் 'குட்டி பட்ஜெட்' மீதான விவாதம் நடைபெற்ற போது அரச பிரதிநிதிகள் பெருமளவில் கலந்து கொள்ளவில்லை என்று தெரிவிக்கப்படுகிறது.

நேற்று முன்தினம் காலை 9 மணிக்கு நாடாளுமன்றம் உப - சபாநாயகர் [illegible] பொன் [illegible] ரஞ்ஜித் [illegible] அமைச்சரும் ஹரோல்ட் ஹேரத் குட்டி பட்ஜெட்டை சமர்ப்பித்தார்.

விவாத ஆரம்பத்தில் மிகக் குறைவாக சமுகமளித்திருந்த அரச எம். பிக்கள் நண்பகலுக்கு முன்னர் சகலரும் சபையை விட்டு வெளியேறினர்.

கோரம் இல்லை என்று உப- சபாநாயகர் தெரிவிக்கவே பிரதமரும் மற்றும் சில எம். பிக்களும் சமுகமளித்தனர். தொடர்ந்து விவாதம் நடந்தது. (ஒ-3)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ். ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள கழக மைதானத்தில் நடத்திவரும் கரப்பந்தாட்ட (ஓவர்) சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3 00 மணிக்கு நடைபெறும் ஆட்டத்தில் வளர்மதி வி. க. ''பி'' அணியை எதிர்த்து சிவன் இளைஞர் வி. க. 'ஏ' அணி மோதும்.

★ ★ ★

யாழ்ப்பாணம் சென்றலட்ஸ் விளையாட்டுக் கழகம் பி. விபுலானந்தன் கிண்ணத்துக்காக யாழ். பல்கலைக் கழக ஆடுகளத்தில் நடத்திவரும் கூடைப்பந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் இன்று மாலை நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ 3 30 மணி:- பல்கலைக் கழக ''பி'' அணி எதிர் ஜொனியன்ஸ் சிவப்பு அணி.

★ 4 30 மணி:- பற்றிஷியன் அணி எதிர் சென்றலைட்ஸ் சொக்ஸ் அணி.

★ ★ ★

யாழ். மாவட்ட லியோ கழகங்களின் பெண்கள் அணிகளுக்கு இடையில் யாழ். வட்ட லியோ கழகம் நடத்தும் தாச்சிப் போட்டிகள் இன்று மாலை 4 மணி முதல் யாழ். இந்து மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.

ஆட்டங்களில் பங்குபற்றும் லியோ கழக அணிகள் வருமாறு:-

★ யாழ். இந்து மகளிர் எதிர் வேம்படி மகளிர்.

★ சாவகச்சேரி இந்துக் கல்லூரி எதிர் கண்டுக்குளி மகளிர்.

★ மற்றொரு ஆட்டத்தில் யாழ்ப்பாணக் கல்லூரி அணி பங்குபற்றும். (உ)

# வீதியில் விளையாடிய ஐவர் விசர் நாயால் கடியுண்டனர்

## பளைப் பகுதியில் சம்பவம்

தென்மராட்சி, மே. 20

வீதியில் விளையாடிக் கொண்டிருந்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நான்கு பேர் உட்பட ஐந்து சிறுவர்களை விசர் நாய் ஒன்று கடித்த சம்பவம் கடந்த புதன்கிழமை பளை கச்சார்வெளியில் இடம் பெற்றது.

இந்த நாய் இப் பகுதியில் ஆடுகள், மாடுகளுக்கும் கடித்துள்ளது. இந் நாயை அடிப்பதற்குச் சென்ற இளைஞர் ஒருவரும் இதனால் கடியுண்டார். இந்த நாய் பின்னர் இப் பகுதி இளைஞர்களினால் அடித்துக் கொல்லப்பட்டது.

விசர் நாயினால் கடியுண்ட ஐந்து சிறுவர்களும் பளை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு செல்லப்பட்டுப் பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு தனியார் வாகனம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

## உதவி மதுவரி அத்தியட்சகர் பதவி

யாழ்ப்பாணம், மே 20

உதவி மதுவரி அத்தியட்சகர் பதவிகளுக்கு ஆட்களைத் தெரிவு செய்வதற்கான போட்டிப்பரீட்சை எதிர்வரும் 28 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கிறது

இது தொடர்பான சுற்றறிக்கைகள் பிரதம பரிசோதகர்களுக்கும், மதுவரி உதவி ஆணையாளருக்கும் பதிவுத் தபால்மூலம் அனுப்பப்பட்டுள்ளதாகவும் —

இப்பரீட்சைக்கு விண்ணப்பித்தவர்களில் தகுதியான விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை திணைக்களத்தால் அனுமதி அட்டைகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும் மதுவரி ஆணையாளர் யாழ். அரச அதிபருக்கு அறிவித்துள்ளார்.

## மலசல கூடம் அமைத்தல்

நவாலி, மே 20

வலி. தென்மேற்கு பிரதேசத்திலுள்ள அகதி முகாம்களில் வாழும் மக்களுக்கு 124 மலசல கூடங்களை அமைத்துக் கொடுப்பதற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் முன்வந்துள்ளது. (க-100)

## வடமராட்சி கிழக்கில்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கடற் படை விசைப்படகுகளின் நடமாட்டம் அதிகரித்துள்ளது இராணுவத்தினரை ஏற்றி இறக்கும் அதே வேளை இராணுவத்தளபாடங்களை இடம் மாற்றும் கப்பலின் நடமாட்டமும் நாளாந்தம் அதிகரித்து வருகிறது.

ஆனையிறவு, கட்டைக்காடு, வெற்றிலைக்கேணி இராணுவ முகாம்களில் ஹெலிகள் இரவு வேளைகளில் இறங்கிச் செல்கின்றன.

யுத்தக் கப்பல் தரித்து நிற்பதாலும், இரவு வேளைகளில் விமானங்கள், ஹெலிகள் கரையோரப் பகுதிகளை வட்டமிட்டு வருவதாலும், பீரங்கி, ஷெல் தாக்குதல்கள் தொடர்வதாலும் வடமராட்சி கிழக்கு மக்கள் பெரிதும் பதற்றம் அடைந்துள்ளனர்.

புதன்கிழமை இரவு முதல் நேற்றுக் காலை வரை வடமராட்சி, மற்றும் வடமராட்சி கிழக்குப் பகுதிகளில் ஹெலிகள் அடிக்கடி பறந்தன. 'அவ்ரோ' விமானமும் நோட்டமிட்டது.

நேற்றுக் காலை 6 மணியளவில் வடமராட்சி கடற்பகுதியில் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களை மிரட்டும் பாணியில் புக்காரா விமானம் ஒன்று தாழப் பறந்ததாகவும் அறிவிக்கப்படுகின்றது.

நேற்று முற்பகல் 10 - 30 மணியிலிருந்து 'அவ்ரோ' மீண்டும் அடிக்கடி 'ரோந்து' புரிந்தது. இதனால் மக்கள் மத்தியில் பதற்றம் நிலவியது.

இதேவேளை—

வலிகாமம், மேற்கு, வலிகாமம் வடக்கு, வலிகாமம் கிழக்கு பகுதிகளின் குறிப்பிட்ட சில இடங்களை உள்ளடக்கி நேற்று விமானப்படையினரின் ''ரோந்து'' நடவடிக்கை இடம்பெற்றது.

நேற்றுக் காலை முதல் ஹெலிக்கொப்டர், அவ்ரோ, புக்காரா விமானங்கள் மாறி மாறிப் பலதடவை வட்டமிட்டு இந் நடவடிக்கையை மேற்கொண்டிருந்தன.

மாதகல் திருவடிநிலை கடற் பிராந்தியத்தில் இருந்த நேற்று இரவு 8.15 மணிக்கு கடற்படையினர் கரையோரப் பகுதியை நோக்கி தொடர்ச்சியான பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதேவேளை மாதகல் இராணுவமுகாமில் இருந்தும் ஷெல் மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப் பட்டன.

இதேவேளை மண்டைதீவில் நிலைகொண்டுள்ள படையினரும் நேற்று அதிகாலையிலும் நேற்றிரவு 11 மணியளவிலும் யாழ். குடாக்கடலை நோக்கி கடும் ஷெல் வீச்சுக்களை நடத்தினர்.

(அ-144-173-155-117-15-9

இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,
யாழ் கிளைத் தலைமையகம்

### பதவி வெற்றிடம்

(தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து ஆசிரியர்)

விண்ணப்பதாரி தமிழில் விசேட சித்தியும், ஆங்கிலம், கணிதம் உட்பட க. பொ. த. (சா. த.) ஆறு பாடங்களில் சித்தியும் பிற்மன் தமிழ் தட்டச்சு சுருக்கெழுத்தில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்தில் சித்தி பெய்திய சான்றிதழுடன் மேற்படி கற்பித்தலில் அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் 31-05-94க்கு முன்பாக செஞ்சிலுவைச்சங்க யாழ். கிளைத் தலைமையகத்திற்கு அனுப்பி வைத்தல் வேண்டும். மேற்படி விண்ணப்பதாரிகளுக்கான செய்முறைப் பரீட்சை 05-06-94 பகல் 10-00மணிக்கு கிளைத் தலைமையகத்தில் நடைபெறும். (பரீட்சார்த்திகள் தமது தட்டச்சு இயந்திரத்தை கொண்டுவருதல் வேண்டும்).

செஞ்சிலுவைச் சேவையில்,
கௌரவ செயலாளர்.

73, கண்டிவீதி,
யாழ்ப்பாணம்.
18-05 1994

(சி-8184)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை நலன் பாராட்டு



விரிவுரைகள் பல செய்து விளங்கிட வைத்தீரே,
பரிவுரைகள் பலவற்றால் பரிமளிக்கச் செய்தீரே,
அறிவுரைகள் பலசெய்து ஆறுதலும் அளித்தீரே,
செறிவான நும்செயல்முறைகள் செப்பிடவும் முடியாதே !

சமய் செய்து சீர் தூக்கும் கோல் போல் அமைந்தே
சாந்தமொடு அன்பினையும் நுமதாக்கிக் கொண்டீரே
நித்தம் எம் நெஞ்சத்தில் நிலைத்திடும் எம் குருவே
விரும் விரமாய்க் கவிமாலை சூடினாலும் முடியாதே !

எண்ணரிய நற்பயன்கள் எல்லாம் மிகப்பெற்றும்
புன்னகை முகத்துடனே பொலிவாய் திகழ்ந்திருக்கும்
சண்முகராஜா ஐயாவின் நற்றுணையான அம்மாவே
பல்நெடுங்காலம் வாழ்கவென பாராட்டி வாழ்த்து கின்றோம்.!

வாழியவே... வாழியவே

கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை
ஆசிரிய மாணவர்கள்

(சி/8189)

---

இமையாணன் உடுப்பிட்டி
## வீரகத்தி விநாயகர் முத்தமிழ் இந்துக் கலாமன்றத்தின்
## ஆண்டு விழாவும் பாராட்டு விழாவும்

வீரகத்தி விநாயகர் முத்தமிழ் இந்துக் கலாமன்றத்தின் பத்தாம் ஆண்டு நிறைவு விழாவில் முதுபேரறிஞர்

**திரு. அருணாசலம் விநாயகமூர்த்தி**
அவர்களுக்கு


பட்டமளித்து விருது வழங்கி பொன்னாடை அணிவித்துக் கௌரவித்தல்

காலம்:- இன்று மாலை 6 மணி
இடம்:- வீரகத்தி விநாயகர் அரங்கு

(சி-8188)

---

# 6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
## வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்

(உரிமையாளர் ந ஜுவல்லர்ஸ், யாழ்ப்பாணம், சுப்பிரமணியம் சோடாக் கொம்பனி வல்வெட்டித்துறை)

மலர்வு: 12 – 07 – 1913
உதிர்வு: 25 03 – 1988
திதி 20 - 05 - 1994

நீன்றாண்டு காலமாய் நினைவிலே நின்றெமக்கு
நீங்காத துணைபுரிந்த
தோன்றாத புள்ளியாய் தொலைவிலே மறைந்திட்ட
தூய தலைவா உனக்கு
ஆறாண்டு நினைவாக முழுமனதுடனுன்னில்
மூழ்கிய அஞ்சலியொன்றும்
தோன்றாத துவழ்கின்றோம்!
தோகை மயில் மீதேறும் தூய சண்முகப் பெருமானே!

மனைவி, மக்கள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்

ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

(7400)

---

# தவறிவிட்டது

ஆனைக்கோட்டையிலிருந்து ஊரெழு வரும் போது கறுப்பு நிற ஆண்களின் பேர்ஸ் ஒன்றுடன் அடையாள அட்டை, பாஸ், இரு தங்கச் சங்கிலிகளும், பணம் 6 000/-, பெண்கள் அணியும் கைக்கடிகாரமும் 17-5-94 அன்று தவறிவிட்டன. தயவு செய்து இதை கண்டெடுத்தவர் கள் 149/1, கோயில் வீதி, நல்லூர் என்ற முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

அடையாள அட்டை இல. 488142089 - V
இராசேந்திரம் ரோகினிதேவி
கரம்பொன் கிழக்கு ஊர்காவற்றுறை

தகவல்:
திருமதி. இராசேந்திரம்

(30985)

---

யாழ்.
## றோட்டறிக் கழக
ஆதரவில்
## யாழ். றோட்டரக்ட் கழகம்
நடத்தும்
## 7பேர் கொண்ட அணிகளுக்கு
இடையிலான
## ஹொக்கி சுற்றுப் போட்டியின்
# இறுதிப் போட்டி

காலம்: **20 - 05 - 94** (இன்று)
இடம்: யாழ். பல்கலைக்கழக ஹொக்கி மைதானம்

பிரதம விருந்தினர்
பேராசிரியர் வே. தர்மரெட்ணம்
(தலைவர், கணித, புள்ளிவிபரவியல் துறை, யாழ். பல்கலைக் கழகம்)

சிறப்பு விருந்தினர்
றோட்டேரியன் எஸ். இராஜேந்திரன்
(பிரதிமுகாமையாளர், ஹற்றன் நஷனல் வங்கி லிமிட்)

திரு. எஸ். முருகநேசன்
(செயலாளர், விளையாட்டு அபிவிருத்திக் குழு)

4மணி:- 3ஆம் இடத்திற்கான ஆட்டம்
யாழ் பல்கலைக்கழக நீல அணி
எதிர்
கிறாஸ்கொப்பேர்ஸ் யங் அணி

4-45மணி:- இறுதியாட்டம்
யாழ். பல்கலைக்கழக கோல்ட்ஸ் அணி
எதிர்
கிறாஸ்கொப்பேர்ஸ் பச்சை அணி

அனைத்து விளையாட்டு ரசிகர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

யாழ் றோட்டரக்ட் சமூகத்தினர்.

[30974]

---

## "சுகவாழ்வு" வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், மே 20
"யூனிசெப்" உதவியுடன் மாநகராட்சி மன்ற நகர்ப்புற அடிப்படைச்சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வெளியிடப்படும் 'சுகவாழ்வு' எனும் காலாண்டுச் சஞ்சிகையின் வெளியீட்டு விழா நாளை சனிக்கிழமை பிற்பகல் 2 45 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

மாநகர ஆணையாளர் தலைமையில் நடைபெறவுள்ள இவ்வைபவத்தில் பிரதம விருந்தினராக பேராசிரியர் வி.கே. கணேசலிங்கம் கலந்து கொள்வார்.

சஞ்சிகைக்கான மதிப்புரை யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சபா. ஜெயராசாவால் வழங்கப்படவுள்ளது. (ஓ-ஊ)

## பட்டமளிப்பு

வல்வெட்டித்துறை, மே 20
உடுப்பிட்டி இமையாணன் விநாயகர் முத்தமிழ் கலாமன்றத்தினரின் ஏற்பாட்டில், பல்கலை இலக்கண வித்தகர் திரு. அருணாசலம் விநாயகமூர்த்தி தமிழ் மாமணி என்ற பட்டமளித்து கௌரவிக்கப் படவுள்ளார்.

இது தொடர்பான வைபவம் இன்று வெள்ளி இரவு 7மணியளவில் நடைபெறும். (த-155)

## கண்காட்சி

யாழ்ப்பாணம், மே 20
நல்லூர் நாயன்மார் வீதியிலுள்ள யோகி ஹோம் சயன்ஸ் அக்கடமி மாணவிகளால் நடத்தப்படும் கேக் மார்சினி மலர் அலங்காரவிழா இன்று வெள்ளிக்கிழமை காலை 10மணிக்கு யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகரால் ஆரம்பித்து வைக்கப்படும்.

இக் கண்காட்சி தொடர்ந்து 4நாட்கள் காலை9மணி முதல் மாலை 6 மணிவரை நடைபெறும். (க)

---

# A/L 96
**CHEMISTRY**
Mr. மகேஸ்வரன்
B sc. (Hons)

ஆரம்பம்:
**21** சனி **11-00**

**PHYSICS**
Mr. மோகன B.sc
திங். வியா பி. ப. **5-00**

**SHAMROCK**
யாழ். — சுண்டுக்குளி.

(30978)

---

அரச எழுதுநர் சேவைக்கும்,
அதனோடிணைந்த சேவைகளுக்கும்,
அரச கூட்டுத்தாபன எழுதுநர்
பதவிக்கும் ஆட்சேர்ப்பதற்கான

# பொதுப் போட்டிப் பரீட்சை - 1994

மேற்படி பரீட்சைக்கான விபரங்கள் **20-5-1994** திகதி அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி **17-06-1994** ஆகும். இதற்கான பரீட்சை **25-08-1994** இல் நடைபெறவுள்ளது.

வட மாகாண விண்ணப்பங்கள் மாத்திரம் பதிவுத் தபால் மூலம் அரசாங்க அதிபருக்கு அனுப்பப்படல் வேண்டும். வர்த்தமானி கிடைத்ததும் மாதிரி விண்ணப்பப்படிவம் பத்திரிகைகளில் வெளியிடப்படும்.

இலங்கை நிர்வாக சேவைக்கான பரீட்சை **04-06-1994** இல் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. தெரிவு செய்யப்பட்டவர்களுக்கான பிரவேசப் பத்திரம் பரீட்சை ஆணையாளரால் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கா. மாணிக்கவாசகர்
யாழ் அரச அதிபர்.
அரச அதிபர் காரியாலயம்,
யாழ். மாவட்டம்.

(சி/8186)

---

## யாழ். ஸ்ரீதரில்
## விடுதலைப்புலிகள் கலை, பண்பாட்டுக் கழகமும் நிதர்சனமும்
இணைந்து வழங்கும்.

# மண்ணுக்காக...

நடிகர்கள்
தேவர் அண்ணா, கணேஸ், கலையரசன்
அமரசிங்கம், பிரியா, பூரணா

மழலைத் தாரகைகள்
சி. சிவரஞ்சனி சி. சிவநிரஞ்சனா
மற்றும் பலர்

படப்பிடிப்பு & படத்தொகுப்பு
றியோ (நிதர்சனம்)

நிழல்படம் — நகுலேஸ் (அர்ச்சனா)
பாடல் ஒலிப்பதிவு — கிருபா (நிதர்சனம்)

பாடியவர்கள்
விஜயன் — வேஜின் மேளின்

மூலக்கதை — வல்வையூரன்
இசை — முரளி

பாடல், படக்கதை, உரையாடல் நெறியாள்கை
பொன். கணேசமூர்த்தி

தினசரி மாலை **3 00** மணி, **6.00** மணி,
சனி, ஞாயிறு காலை **10 30** மணி,
மாலை **3 00**, மணி **6.00** மணி

(சி/8187)

---

## நாடக வளர்ச்சி நிதிக்காக
பருத்திநகர் பெருந்திறல் சாண்றோன்
## சாண்டோ எம். துரைரத்தினம் அவர்களும்
மாணவர்களும் வழங்கும்

# வீரதீர செயல்கள்

இடம்: யா/ வட்டு- இந்துக்கல்லூரி மைதானம்
காலம்: நாளை சனிக்கிழமை இரவு 7 மணி



* நெருப்பு புகைகுழியில் சிலமணி நேரம் படுத்திருத்தல்
* இரண்டு உழவு இயந்திரத்தை எதிர்எதிராக உடலில் ஏற்றுதல்
* அதிபாரம் கொண்ட லொறியை மார்பில் ஏற்றுதல்
* ஓடும் மோட்டார் சைக்கிள் இரண்டினை தொண்டையால் இழுத்து நிறுத்துதல்
* 35 Kg நிறையுடைய குண்டை 7 அடி உயரத்திலிருந்து வயிற்றில் போடுதல்
* அதிபாரம் கொண்ட கல்லை நெஞ்சில் வைத்து உடைத்தல
* 3" ஆணி பலகையின் மேல் படுத்து உழவு இயந்திரத்தை மார்பின்மேல் ஏற்றுதல்
* வெறும் உடலின்மேல் உழவு இயந்திரத்தை ஏற்றுதல்
* வாயினால் மோட்டார் சைக்கிளைத் தூக்குதல்
* மற்றும்பல வீரதீரச் செயல்களும் இடம்பெறும்

அன்பளிப்பு:
ரூபா **25/- 50/- 100/- 250/- 500/- 1000/**

குறிப்பு: பெண்களுக்கு விசேட அரங்க வசதிகள் செய்யப்பட்டுள்ளன

[30980]

---

# மரண அறிவித்தல்கள்

## செல்லத்துரை குலசேகரம்பிள்ளை

காரைநகர் பாலாவோடையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், காரைநகர் நாவலடி கேணியடியில் வசித்து வந்தவரும் முன்னைநாள் மினுவாங்கொடை பிலங்கா இன்டஸ்றீஸ் விற்பனை விநியோகஸ்தரும், தற்பொழுது விசுவமடு 'சிவனேஸ்வரி ஸ்ரோர்ஸ்' உரிமையாளருமான செல்லத்துரை குலசேகரம்பிள்ளை நேற்று மாலை காலமானார்

அன்னார் வாசிந்தா செல்லத்துரை, தெய்வானையின் அன்புமகனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர், தம்பிராசா, மற்றும் துரைராசா, செல்வரத்தினம், திருமதி. யோகேஸ்வரி இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவனேஸ்வரியின் அன்புக் கணவரும், கிருபானந்தன், சிவானந்தன் (சுவிஸ்), அருளானந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்

அன்னாரின் ஈமக்கிரியைகள் சுளிபுரம் சத்தியக்காடு சந்தைக்கு அருகிலுள்ள சகோதரரான இராசேந்திரம் இல்லத்தில் நடைபெறும். நகதி பின்னர் அறிவிக்கப்படும்

தகவல்:-
செ கோடிலிங்கம்
(மைத்துனர்)

(30983)

## எஸ். பூரணசற்குணன்

புலோலி. பருத்தித்துறையை பிறப்பிடமாகக் கொண்ட எஸ் பூரணசற்குணன் (இளைப்பாறிய உதவிக் கல்விப் பணிப்பாளர், கல்வித் திணைக்களம் — Rtd. Assistant Director of Education) அவுஸ்திரேலியாவில் 16 - 05 - 94 ஆல் காலமானார். இவர் காலஞ்சென்ற திரு திருமதி D K சின்னத்தம்பியின் அருமை மகனும், மேளின் (அவுஸ்திரேலியா) அன்புக் கணவரும், செல்வராணி (U K), சாந்ததேவி (U. K), சத்தியமலர் (U K), மனோரஞ்சிதம் (அவுஸ்திரேலியா), சரோஜினி (அவுஸ்திரேலியா), சத்தியராஜ் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், கிருபாநாயகம் (U.K), விமலேந்திரா (U. K), Dr. திருநாவுக்கரசு (U K), கீர்த்தி ஜெயதிலக (அவுஸ்திரேலியா), ஜெயரத்தினம் (அவுஸ்திரேலியா), ரஞ்சினி (அவுஸ்திரேலியா) ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற திருமதி சாந்தம்மா நாகலிங்கம், காலஞ்சென்ற திருமதி ஞானம்மா ஜயரத்துரை, திருமதி பரஞ்சோதி ஜயாத்துரை, காலஞ்சென்ற திருமதி கிருபை கென்ஸ்மன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை 20 ஆம் திகதி இன்று வெள்ளிக்கிழமை அவுஸ்திரேலியா மெல்பேர்னில் நடைபெறும்.

No 1/185, Carinish Road Clayton,
Victoria -3168, Australia.

தகவல்:
ஐ ஞானதாசன்

No 4 Ebert Place,
Colombo 05.

(30979)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 20 - 05 - 1994 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org